2002 மே 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

திரு.ஜி. பழனிசாமி: இல்லை, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 317, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

317—

இழப்பீட்டுத் திட்டம்

***7243—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழைகளின் பசுமாடு இறந்தால் இழப்பை ஈடுசெய்ய வருவாய்த் துறை மூலம் ரூ.5,000/- வழங்கப்பட்ட திட்டம் நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த வருடமும் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழைகளின் பசுமாடு இறந்தால் இழப்பீடு செய்ய வருவாய்த் துறை மூலம் ரூ.5,000/- வழங்கும் திட்டம் எதுவும் இத்துறையில் நடைமுறையில் இல்லை.

(ஆ) எழாது.

திரு. ப. பொன்னம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைப்பதற்கு உடம்பில் தெம்பு இல்லாத ஏழை விவசாயிகள் ஜீவனத்திற்காக மாடுகள் வாங்குவதற்குக்கூட பணம் இல்லாமல் கடன் பெற்று பசு, எருமை மாடுகளை வாங்குகிறார்கள். அவர்களது குடும்பம் முழுவதும் அந்த மாடு கறக்கும் பாலை விற்றுப் பிழைக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களிடம் உள்ள மாடுகள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பமே வாழ வழியில்லாமல் நிர்க்கதியாய் ஆகிவிடுகின்றன. எனவே தாயுள்ளம் கொண்ட தங்கமான தலைவி, ஏழைகள்மீது இரக்கம் கொண்ட ஏந்தல், புரட்சித்தலைவி அம்மா*

அவர்கள் அரசு இதை மறுபரிசீலனை செய்து ரூபாய் ஐயாயிரம் வழங்க ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிவோடு கேட்ட கேள்விகளுக்கு, புயல் மழை வெள்ளம் போன்ற இயற்கை இன்னல்களால் இறந்துபோகும் கால்நடைகளுக்கு மட்டும்தான் கால்நடை உதவி மருத்துவர், உதவி இயக்குநர் மற்றும் மண்டல இணை இயக்குநர் பரிந்துரையின்பேரில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அரசு நிர்ணயித்தபடி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. வேறு எந்தச் சூழ்நிலையிலும் இறந்து போகும் கால்நடைக்கு நஷ்டயீடு எதுவும் இதுவரை இத்துறையினால் வழங்கப்படவில்லை என்பதையும் தங்களின் மூலம் இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 318, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

318—

பட்டுச் சேலைகள்

***19116—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியிலுள்ள பெரும்பான்மையான ஊர்களில் பட்டுச் சேலைகள் அதிகமாக உற்பத்தியாகி விற்பனை குறைந்து சேலைகள் தேங்கிக் கிடப்பதைக் களைய பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணி தொகுதியிலுள்ள பெரும்பான்மையான ஊர்களில் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை குறைந்து பட்டுச் சேலைகள் தேங்கிக்